## மதுரை மாவட்டத்தில் கனமழை!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி நிவாரணப் பணிகள் தீவிரம்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, அக்.27-

மதுரை மாவட்டத்தில் பெய்த கனமழை -முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அவர்களது உத்தரவின்படி மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள்

25.10.2024 அன்று பிற்பகல் 3.00 மணி முதல் மதுரை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மழைப்பொழிவு ஏற்பட்டது. நேற்று (26.10.2024) காலை 8.30 மணி வரை மதுரை மாவட்டத்தில் சராசரியாக 4.73 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. குறிப்பாக, சித்தம்பட்டி, இடையப்பட்டி, உசிலம்பட்டி, சோழவந்தான், குப்பனம்பட்டி, கள்ளந்திரி, தள்ளாகுளம் உள்ளிட்ட பகுதிகளில் 10 செ. மீ. வரை கனமழை பதிவானது.

இதன் காரணமாக 20 பகுதிகளில் மழை நீர் தேங்கியது. குறிப்பாக குறைந்த கால அளவில் பெய்த கனமழையின் காரணமாக மதுரை மாநகராட்சிப் பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள செல்லூர், விளாங்குடி, ஆனையூர் பகுதிகளில் 374 வீடுகளுக்குள் மழை நீர் புகுந்தது.

மதுரை மாநகராட்சியும், மாவட்ட நிருவாகமும் ஒன்றிணைந்து பொதுமக்களை வெளியேற்றி 5 நிவாரண முகாம்களில் 161 நபர்களை தங்க வைத்து அவர்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தனர். மேலும், பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு இதுவரை 5215 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டது. பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் 74 மருத்துவ முகாம்களும், 44 கால்நடை மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டன. பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அனைத்துத் துறை அலுவலர்களைக் கொண்ட 6 குழுக்கள் அமைக்கப்பட்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அன்று இரவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்களுக்கு நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த அறிவுறுத்தினார். மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கள நிலவரத்தை கேட்டறிந்தார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக அமைச்சர் பெருமக்கள், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் மாவட்ட ஆட்சியர் மதுரை மாநராட்சி ஆணையர் ஆகியோருடன் கலந்தாலோசித்து மீட்புப் பணிகளை துரிதப்படுத்த அறிவுறுத்தினார்.

கனமழையினைத் தொடர்ந்து தேங்கிய மழை நீரை வெளியேற்ற 38 நீர் இறைப்பான்கள் மற்றும் 44 JCB இயந்திரங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், செல்லூர் கண்மாயிலிருந்து உபரி நீரை வைகை ஆற்றிற்கு கொண்டு செல்ல புதிதாக கால்வாய் அமைக்கக்கப்பட்டுள்ளது. ஆணையூர் பகுதியில் உள்ள முடக்கத்தான் கால்வாயில் ஏற்பட்ட சிறு உடைப்பு உடனடியாக நீர் வள ஆதாரத் துறையால் சரி செய்யப்பட்டது. கண்ணநேந்தல் நாகனாகுளம் சின்ன கண்மாயில் நீர் நிரம்பிய நிலையில் உபரி நீர் கால்வாய் வழியாக நீர் வெளியேற்றப்பட்டு ஆத்திக்குளம் கண்மாய்க்கு கொண்டு செல்லப்பட்டது.

செட்டிக்குளம் தேவி நகர் குடியிருப்பு பகுதி, கோவில் பாப்பாக்குடி கிராமம் சத்யா நகர், தினமணி நகர் பகுதிகளில் தேங்கிய மழை நீரை வெளியேற்ற ஊராட்சி நிருவாகத்தினால் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், நீர் தேங்கிய பகுதிகளில், மழை நீரை வெளியேற்றும் பணி தொடர்ந்து முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

மதுரை மாநகராட்சி பகுதிகளில் பாதிப்பிற்குள்ளாகும் பொதுமக்களை பாதுகாப்பாக தங்க வைக்க 102 நிவாரண முகாம்கள் கண்டறியப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மாநகராட்சி பகுதிகளில் பருவமழை பாதிப்புகளை கையாள்வதற்கென்று தனியே பல்துறை மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மதுரை மாநகராட்சி பகுதிகளில் 240.30 கி.மீ. நீளத்திற்கு மழை நீர் வடிகால் தூர் வாரும் பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள 54.20 கி.மீ. நீளத்திற்கான கால்வாய்கள் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. நீர்நிலைகளில் உடைப்பு ஏற்படும் நேர்வுகளில் உடனடி தடுப்பு நடவடிக்கைக்காக 5000 மணல் மூட்டைகள் தயாராக வைக்கப்பட்டுள்ளன. இதுவன்றி, போதுமான அளவு பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்பு உள்ளிட்ட சுகாதாரப் பராமரிப்பு பொருட்கள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

வடகிழக்கு பருவமழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து துறை அலுவலர்களுடன் அமைச்சர் பெருமக்கள் தலைமையில் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. மேலும், துணை ஆட்சியர் தலைமையில் ஒவ்வொரு வட்டத்திற்கும் மொத்தம் 11 பல்துறை மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பருவ மழை பாதிப்புகளை எதிர்கொள்ள 286 JCBக்கள், 506 லாரிகள், 65 மர அறுப்பான்கள், 94 ஜெனரேட்டர்கள், 5 படகுகள் உள்ளிட்ட மீட்பு உபகரணங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மதுரை மாவட்டத்தில் 2425.19 கி.மீ. நீளத்திற்கு மழை நீர் வடிகால்களில் அடைப்புகள் நீக்கப்பட்டதோடு, 1992.53 கி.மீ. நீளத்திற்கு கால்வாய்கள் தூர்வாரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் பெய்த மழையின் காரணமாக நீர் தேங்கிய பகுதிகளுக்கு நிரந்தர தீர்வு காண தொடர்புடைய துறைகளுக்கு உத்தரவிட்டுள்ளார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது உத்தரவின் படி, அமைச்சர் பெருமக்களின் ஒருங்கிணைப்பில் மாவட்ட நிருவாகமும், மாநகராட்சியும் நிவாரணப் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.



திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், எம்.பி., டாக்டர் எ.வ.வே.கம்பன், கோ.கண்ணன், ஆர். இராஜசேகரன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஓ.ஜோதி இரா.ஸ்ரீதரன், பொன் முத்து, ஆர்.சிவானந்தம், வ.அன்பழகன், ஆர்.வேல்முருகன், எஸ்.பன்னீர்செல்வம், நா.பாண்டுரங்கன், ப்ரியா விஜயரங்கன், க.லோகநாதன், பி.ஏ.தட்சிணாமூர்த்தி, ஜெயராணி ரவி, பார்வதி சீனுவாசன். க.சௌந்தரராசன், சிவ.ஜெயராஜ், ப.கார்த்தி வேல்மாறன் மற்றும் தேர்தல் பார்வையாளர்கள் உட்பட பலர் உள்ளனர்.

## எழும்பூர் தொகுதி:

# பி.கே.காலனி பழைய குடியிருப்பை இடித்து அகற்றும் பணி!

### இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஆய்வு செய்தார்!

சென்னை, அக். 27 -

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.77, புளியந்தோப்பு, பி.கே.காலனியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் புதிய அடுக்கு மாடிக் குடியிருப்பு கட்டுவதற்காகப் பழைய குடியிருப்பை இடித்து அகற்றும் பணியைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியம், மின்வாரியம் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த அலுவலர்களுடன் ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின்போது எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் காந்தி, கமலக்கண்ணன்; எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் இரா. வெற்றிவேல், 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், 77 ‘அ’ வட்டத் துணைச் செயலாளர் ஆர்.ஆரோக்கியம், அவைத் தலைவர் விசுவநாதன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி அணி துணை அமைப்பாளர் ஜெ. சிலம்பரசன், 108 ‘அ’ வட்ட இளைஞரணி அணி அமைப்பாளர் பு.சதிஷ் குமார், விஜயபோஸ், கோமகன், கே.பி.பார்க் சதிஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

## அச்சுறுத்தும் வடகிழக்குப் பருவமழையிலிருந்து

# தமிழகத்தை காத்திடும் முதல்வர், துணை முதல்வருக்குப் பாராட்டுக்கள்!

### திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

சென்னை, அக்.27-

அச்சுறுத்தி வரும் வடகிழக்கு பருவமழை தாக்கத்திலிருந்து, தலை நகராம் சென்னை உட்பட தமிழகத்தை எவ்வித பாதிப்புமின்றி காத்திடும் தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் ஆகியோருக்கு பாராட்டுக்கள் என பல்வேறு தீர்மானங்கள் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. தீர்மானங்களை விளக்கி, பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் சிறப்புரையாற்றினார்.

26.10.2024 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகித்தார்.

சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ். தரணிவேந்தன்.எம்.பி., வடக்கு மாவட்ட அவைத் தலைவர் இரா.இராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், பொதுப்பணி துறை அமைச்சருமான எ.வ. வேலு அவர்கள் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**இரங்கல் தீர்மானம்**

திராவிட இயக்க தத்துவ பேராசான் அண்ணன் முரசொலிமாறன் அவர்களின் சகோதரரும், கழக நாளிதழ் முரசொலியின் ஆசிரியர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சகோதரி மகனும், மருமகனும், அன்பு சகோதரி செல்வி அவர்களின் துணைவருமான, அண்ணன் முரசொலி செல்வம் அவர்களின் மரணத்திற்கு இந்த மாவட்ட கழகம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், வந்தவாசி நகரைச் சேர்ந்த, கழகத்தின் தலைமைக் கழகப் பேச்சாளர் பி.எச்.பிங்களன் அவர்களின் மரணத்திற்கு இந்த மாவட்டக் கழகம் ஆழ்ந்த இரங்கலையும், அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் – 1**

திருவண்ணாமலை மாவட்டத்தில், சர்வதேச தரத்திலான ஹாக்கி ஸ்டேடியம் ஓராண்டு காலத்திற்குள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று அறிவித்திட்ட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இந்த மாவட்ட கழகம் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**தீர்மானம் –2**

தமிழ்நாட்டை அச்சுறுத்தி வரும் வடகிழக்கு பருவமழை இயல்பைவிட அதிக அளவு பொழிந்தும், தமிழகத்தின் தலைநகரமான சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள மாவட்டங்களிலும் சிறிது பாதிப்புமில்லாமல், பொதுமக்களைகாத்திட்டமைக்கும், அதே போல் மதுரை, கோவை உள்ளிட்ட தமிழ்நாடு முழுக்க மழை வெள்ளத்திலிருந்து, பொது மக்களை காத்து அவர்களுக்கு உரிய நிவாரணம் அளித்திட்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கொட்டும் மழையிலும் பம்பரமாக சுழன்று பணியாற்றிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இந்த மாவட்ட கழகம் நன்றியினையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் – 3**

புதிய வாக்காளர்கள் சேர்த்தல் மற்றும் நீக்கலுக்கான சிறப்பு முகாம்கள் தேதி மாற்றப்பட்டுள்ளது. நவம்பர்16, 17 சனி, ஞாயிறு, மற்றும் நவம்பர் 23, 24 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில், அவரவர் வாக்களிக்கும் வாக்கு மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது. கழக நிர்வாகிகளும், வாக்குச்சாவடி முகவர்களும் சிறப்பாக பணியாற்றிட இந்த மாவட்ட கழகம் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் – 4**

தமிழகத்தின் 234 சட்டமன்ற தொகுதிக்கும், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பொறுப்பாளர்களை நியமித்துள்ளார். நமது திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 8 தேர்தல் பொறுப்பாளர்களை நியமித்திருக்கிறார். மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளை மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் அவர்களோடு தொடர்பு கொண்டு தேர்தல் பணியினை சிறப்பாக ஆற்றிட இந்த மாவட்ட கழகம் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறுதீர்மானங்கள் ஒருமனதாகநிறைவேற்றப்பட்டது.

செயற்குழுக் கூட்டத்தில் கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஓ. ஜோதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொன்.முத்து, ஆர்.சிவானந்தம், ஆர்.வேல்முருகன், கே.வி.ராஜ்குமார், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க. சௌந்தரராசன், சிவ. ஜெயராஜ், நகர செயலாளர்ப.கார்த்திவேல்மாறன்,

வடக்கு மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டுரங்கன், க.லோகநாதன், ஜெயராணிரவி, மாவட்ட பொருளாளர் டி.ஏ.தட்சணாமூர்த்தி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனுவாசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே. வி.சேகரன், கோ. எதிரொலிமணியன், சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள் டாக்டர் இரா. மாசிலாமணி, எஸ். பி.மணிமாறன், டாக்டர் மாலதி நாராயணசாமி, பா.செந்தமிழ்செல்வன், டாக்டர் எ.வ.வே.கம்பன், ஊரல் அண்ணாதுரை, டாக்டர் ஆர்.டி.அரசு, கே.செந்தில்குமார்.

தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ.ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன். தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு.கணேஷ், விஜி(எ) எஸ். விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர். எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், கற்பகம்சரவணன், உ. நித்யா, வடக்கு மாவட்டம். மா.ஏழுமலை, என். கே.ஏ.பாபு, இ.எஸ்.டி. கார்த்திகேயன், கே.ஏ.புஷ்பராஜ், டாக்டர் மகேந்திரன், ஜி.பி.அசோக், பி. எஸ்.சாந்தகுமார், ப.மணிகண்டன், இ.பிச்சைகண்ணு, பி.செல்வராஜன், ஏ.எம்.சம்பத், அமானுல்லா, இ.மணிகண்டன், தொ.ப.சீ.மதிவாணன், சாது.ஆனந்த், அப்சல் பாஷா, ப.க.மணி வண்ணன், ஆர்.ராம்ரவி, இப்ராஹிம் ஷெரீப், மாலினி வினோத் திவாகரன், இராணிவெங்கடேசன்,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு. பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ. கோவிந்தன், ப.கேசவன், கோ. ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க. சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி. ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிரமணியன், பி.மனோகரன், ஏ.எழில்மாறன், கே.டி.ராமசாமி, என். டி.மனோகரன், எஸ்.எஸ். அன்பழகன், எம்.சுந்தர், எஸ்.மோகன், து.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே. சீனுவாசன், ஏ.ஜி.திராவிட முருகன், எஸ்.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி.பழனி, சி. ஆர்.பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன், தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி. கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி.வி.தயாநிதி, ஏ. எம்.காசி, எம்.கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா, தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், டி.கே.மோகன், கே. கோவர்த ணன், வேணிஏழுமலை மற்றும் மாவட்ட பிரதிநிதி கள் உட்பட சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக தெற்கு மாவட்ட துணை செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான மு.பெ.கிரி நன்றி கூறினார்.



எழும்பூர் தொகுதி, வார்டு எண்.77, புளியந்தோப்பு, பி.கே.காலனியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் புதிய அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டுவதற்காகப் பழைய குடியிருப்பை இடித்து அகற்றும் பணியைக் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியம், மின்வாரியம் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த அலுவலர்களுடன் ஆய்வு செய்தார். உடன் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ. மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் காந்தி, கமலக்கண்ணன்; இரா.வெற்றிவேல், கே.சீனிவாசன், ஆர்.ஆரோக்கியம், விசுவநாதன், ஜெ.சிலம்பரசன், பு.சதிஷ்குமார், விஜயபோஸ், கோமகன், கே.பி.பார்க் சதிஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

## சீரணி படையில் சேர்ந்து கழகக் கொள்கைகளைப் பரப்பிய

# சீரணி சண்முகம் மறைவு!

### ஆர்.எஸ்.பாரதி - டி.கே.எஸ்.இளங்கோவன் - ஆர்.பத்மநாபன் நேரில் அஞ்சலி!

சென்னை, அக். 27 -

பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய ‘சீரணி படை’யில் சேர்ந்து அன்று முதல் கழகக் கொள்கைகளை பட்டி தொட்டியெங்கும் பரப்பிய கழகச் சொற்பொழிவாளர் “சீரணி ச. சண்முகம்” மறைவுச் செய்தி அறிந்து, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே. எஸ். இளங்கோவன், தலைமைக் கழக மேலாளர் ஆர். பத்மநாபன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய ‘சீரணி படை’யில் சேர்ந்து, அன்று முதல் கழகக் கொள்கைகளை தமிழகத்தின் பட்டி தொட்டியெங்கும் பரப்பிய கழகச் சொற்பொழிவாளரும் - 1974ஆம் ஆண்டு ஆயிரம்விளக்கு தொகுதி சீரணித் தலைவராக பொறுப்பு வகித்தவரும் - முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் தளபதி ஆகியோரின் அன்பைப் பெற்றவருமான சீரணி ச.சண்முகம் (வயது 84) அவர்கள் வயது மூப்பின் காரணமாக இன்று (26.10.2024) மறைவெய்தினார்.

சென்னை48, மண்ணிவாக்கம், ராஜாத்தி கலைஞர் நகரில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது உடலுக்கு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தலைமைக் கழக நிர்வாகி ஆர். பத்மநாபன் ஆகியோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.



பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய `சீரணி படை'யில் சேர்ந்து, அன்று முதல் கழகக் கொள்கைகளை தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் பரப்பிய கழகச் சொற்பொழிவாளரும் – 1974ஆம் ஆண்டு ஆயிரம்விளக்கு தொகுதி சீரணித் தலைவராக பொறுப்பு வகித்தவரும் – முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் தளபதி ஆகியோரின் அன்பைப் பெற்றவருமான சீரணி ச.சண்முகம் (வயது 84) அவர்கள் வயது மூப்பின் காரணமாக நேற்று (26.10.2024) மறைவெய்தினார். சென்னை48, மண்ணிவாக்கம், ராஜாத்தி கலைஞர் நகரில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது உடலுக்கு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தலைமைக் கழக மேலாளர் ஆர்.பத்மநாபன் ஆகியோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.